[8th August 1966

(*b*) if so, whether such a station will be located there in the near future?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திரு. செ. சீனிவாசன் : போலீஸ் ஸ்டேஷன் ஓரிடத்தில் ஏற்படுத்துவதற்கு என்ன என்ன நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தப் பகுதியில் ஜாஸ்தி அமைதிக் குறைவாக இருந்தால், அடிக்கடி களவு போகிறது என்றால், அந்த இடங்களைப் பார்த்து ஏற்படுத்துகிறோம். இல்லாத இடங்கள் பக்கத்தில் உள்ள ஸ்டேஷன்களோடு இணைக்கப்படுகின்றன.

திருச்சி கொதிகலன் தொழிற்சாலை

*215 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :
திரு. வை. சங்கரன் :
திரு. செ. மாதவன் :
கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி கொதிகலன் தொழிற்சாலை சதி வழக்கில் இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) தற்போது மேற்படி வழக்கு எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 35.

(*b*) A criminal case has been registered in Thuvakudy Police station on 27th October 1965 and the investigations relating to this have not yet been completed.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மோசடியில் எத்தனை ரூபாய் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது? இந்த கான்டிராக்ட் வொர்க்ஸ் சூப்ரவிஷன் மத்திய சர்க்கார் கையில் ஒப்படைக்கப்பட்டதா அல்லது நம்முடைய அரசாங்கத்தின் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததா ? பொறுப்பு யார் கையில் இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த வேலை மத்திய சர்க்காருக்காக ஸ்டேட் கவர்ன்மென்ட் பொறுப்பில் நிறைவேற்றப்பட்டு வந்தது. மொத்த நஷ்டம் எவ்வளவு என்று இப்போது சொல்வதற்கில்லை. இன்னும் அது இன்வெஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இந்த மோசடி எப்போது நடந்ததாகச் சொல்லப்படுகிறது ? எப்போது முதலாவதாக கண்டுபிடிக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அது தான் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

8th August 1966]

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறவர்களில் அதிகாரிகள் எத்தனை பேர்? கன்டிராக்டர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. வெ. ராமையா : அதிகாரிகள் 16 பேர்கள். கன்டிராக்டர்கள் 19 பேர்கள்.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, இன்னும் கைது செய்யப்பட வேண்டிய அதிகாரிகள் அங்கே நிறைய இருப்பதாக அந்த வட்டாரத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; பிடிபடாத நிலையில் இருக்கும் குற்றவாளிகளையும் பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா : நான் ஆரம்பத்தில் சொன்னேன், பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது என்று. கனம் அங்கத்தினரிடம் ஏதாவது விவரம் இருந்தால் இன்வெஸ்டிகேஷன் போலீசாரிடம் கொடுக்கலாம். 9-00 a.m.

Sri S. Madhavan : Sir, under rule 40 of the Assembly Rules, I request that an half-hour debate be allowed on the subject matter of this question. A huge amount is involved. . .

Mr. Speaker : The Hon. Minister has already replied that the matter is under investigation.

Sri S. Madhavan : The Hon. Minister cannot give any opinion. But he can give the facts, how much fraud has been committed, who are involved and so on.

Mr. Speaker : There is no doubt about the rule, and the hon. Member can claim an half-hour debate. But, as the matter is under investigation, I do not think I can allow it now.

விளை பொருள்கள் பேரில் வரி

***216 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களின் அடிப்படையில் வரி விதிக்கும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

திங்கள் கிழமைகளில் உணவு விடுதிகள் அடைப்பு

***217 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு. மு. கருணாநிதி :
திரு. செ. மாதவன் :
திரு. கரு. சீமைச்சாமி :
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திங்கட்கிழமைதோறும் உணவு சாலைகள், சிற்றுண்டி சாலைகள், அனைத்தையும் மாலையில் மூடிவிடும்படி அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதா?